**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் வைகாசி 9–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 மே 23 -ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் : 405/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ்ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி பெருமாள் கோவில் வீதி , அண்ணா நகர், பழைய கோட்டை ரோடு முதல் பெரியார் நகர் வரை, சௌடாம்பிகை நகர், தாராபுரம் ரோடு அய்யாசாமி காலணி பகுதிகளில் குழாய் விஸ்தரிப்பு செய்தல்,அய்யாசாமி காலணி நீரேற்று நிலைய வளாகத்தில் தண்ணீர் அளவீட்டு கருவி பொருத்துதல்,சந்தை பகுதியில் உள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து மெயின்குழாய் இணைப்பு வேலைகள் மற்றும் கேட்வால்வுகள் பொருத்துதல் ,களிமேடு பகுதியி ஜி.ஐ குழாய் மாற்றுதல், பங்களாபுதூர் ரோடு, குதிரைப்பள்ளம் ரோடு பகுதிகளில் குழாய் இணைப்பு மற்றும் கேட்வால்வுகள் பொருத்துதல் ,குடிநீர் பிவிசி தொட்டிகளில் மூடிகள் பொருத்துதல்,சிறுமின் விசைப்பம்பு திட்டங்களில் கெபாசிட்டர்கள் மற்றும் மின் ஸ்டார்ட்டர்கள் பொருத்துதல், அழகேகவுண்டன் புதூர் சாலையில் கேட்வால்வு மாற்றி பொருத்துதல்,நொச்சி பாளையத்தில் புதிய ஏர்வால்வு பொருத்துதல், சின்னாய்புதூரில் கேட்வால்வு மாற்றியமைத்தல் மற்றும் மேல்நிலைத் தொட்டியில் இணைப்பு வேலைகள் செய்யும் பணிக்காக 17.04.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 4.93 % | அதிகம் |
| 2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 5.50 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.886. நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**கோப்பு எண் : 1747 /2016 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி 3.00 எம்.எல்.டி அளவுக்கு குடிநீர் மற்றும் அமராவதி குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி 1.00 எம்.எல்.டி அளவுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி திட்டங்களின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படும் அய்யாச்சாமி நகர் காலணி நீருந்து நிலையத்தில் ஒரு ஹைபோகுளோரினேட்டர் கருவியும், தண்ணீர் பந்தல் நீருந்து நிலையத்தில் ஒரு ஹைபோகுளோரினேட்டர் கருவியும் பொருத்தப்பட்டு குளோரினேசன் செய்யப்படுகிறது. இந்த குளோரினேசன் கருவிகளை வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 0.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 887 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:3</u>**

**கோப்பு எண் : 915/2012 /இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் நலன் கருதி ஒவ்வொரு மாதமும் கீழ்க்காணும் குடிநீர் விநியோக திட்டங்களிலிருந்து குடிநீர் மாதிரி எடுத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசோதனை கூடத்தில் ஆய்வு செய்து ஆய்வறிக்கை பெறப்பட்டு வருகிறது.

1. காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்
2. அமராவதி குடிநீர் திட்டம்
3. சிறுமின்விசைப் பம்பு திட்டம்

இதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தரப் பரிசோதனை ஆய்வுக் கூடத்திற்கு ஆய்வுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இதற்கான செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.888 . நாள்.23.05.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:4</u>**

**கோப்பு எண் : 639 /2017 /அ2**

காங்கயம் நகராட்சி பேருந்து நிலையத்திற்கு 08.08.2018 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அங்கீகாரம் புதுப்பிக்க அனுமதி கோருவதற்கு பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு பேருந்து நிலையத்தில் வர்ணம் பூசுதல், கழிப்பறையில் டைல்ஸ் பதித்தல், தண்ணீர் குழாய் பழுதுகள் சரி செய்தல், மின் விளக்குகள் பராமரிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. **1.50** இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 889 . நாள்.23.05.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:5</u>**

**கோப்பு எண் : 1970/2015/எச்1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழிப்பிடம் இடவசதி இருந்தும் இல்லாத வீடுகளை மறு கணக்கெடுப்பு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 17 வீடுகளில் இடவசதி இருந்தும் கழிப்பிடம் இல்லாமல் உள்ளது கண்டறியப்பட்டது. எனவே மேற்படி 17 வீடுகளில் கழிப்பிடம் கட்டுவதற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தூய்மை இந்தியா திட்ட நிதி (ஒரு கழிப்பிடத்திற்கு ரூ. 4000) | 4000 x 17 | 68000 |
| மாநில அரசின் பங்குத் தொகை (ஒரு கழிப்பிடத்திற்கு ரூ. 2000) | 2000 x 17 | 34000 |
| நகராட்சியின் பங்குத் தொகை (ஒரு கழிப்பிடத்திற்கு ரூ. 2000) | 2000 x 17 | 34000 |
| **மொத்தம்** | | **136000** |

**அலுவலககுறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு, பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி மான்யம் பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.890 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்புஎண் : 418/2018/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2018–19 ன் கீழ் ரூ.0.70 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான சிறுவர் பூங்காபகுதியில் சேகரமாகும் தாவர குப்பைகளை மக்கவைத்து உரம் தயாரிப்பதற்காக இப்பகுதியில் சிறு அளவிலானதொட்டிகள்அமைக்கும் பணிக்காக 26.04.18-ல் நடைபெற்றடெண்டரில் பெறப்பட்டஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திருவாளர். திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டைவிட+ 4.90 %அதிகம்
2. திரு.எஸ்.சுப்பையா மதிப்பீட்டைவிட+ 6.50 %அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.திருமணி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 891 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 755/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான சென்னிமலை ரோடு எரிவாயுதகன மேடையின் முன்புறமாக அமைக்கப்பட்ள்ள சுற்றுச்சுவர் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவை தற்சமயம் 08.05.2018 அன்று பெய்த கனமழை (138.00 மி.மீ) காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாதிப்படைந்தது. இதனால் மேற்படி சுற்றுச்சுவர், மழைநீர் வடிகால் ஆகியவைகளின் ஒரு பகுதிகள் இடிந்து விழுந்துள்ளது. எனவே, இதனை சீரமைத்து வடிகால் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.00 (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 892 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:8</u>**

**கோப்பு எண் : 482 /2018/அ1**

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பது தொடர்பான விளம்பர செலவினங்களுக்கும் மற்றும் சொத்துவரி வசூல் தொடர்பான செலவினங்களுக்கு 2018–2019ஆம் ஆண்டுக்கு உத்தேச செலவினம் தொகை ரு.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று ப்ரைட் அட்வர்டைசிங், சென்னை நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.60064/– வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 893 . நாள்.23.05.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:9</u>**

**ந.க.எண்.811/2018/அ1**

1999–ஆம் ஆண்டு திருத்திய தொழில் வரி சட்டம் பிரிவு எண் 16–ன் படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில் வரி விதிப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். தற்போது கீழ்கண்டுள்ளபடி ஆறு மாத மொத்த வருமானத்திற்கு அவற்றிற்கு எதிரே குறிப்பிட்டுள்ளவாறு வரித்தொகை நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | அரையாண்டு சராசரி வருமானம் | 01.10.2013 முதல் 25 % உயர்வு செய்து திருத்தியமைக்கப்பட்ட தொழில் வரி |
|---|---|---|
| 1 | ரூ.21,000/– | இல்லை |
| 2 | ரூ.21,000/– முதல் ரூ.30,000/– வரை | ரூ.125/– |
| 3 | ரூ.30,001/– முதல் ரூ.45,000/– வரை | ரூ.300/– |
| 4 | ரூ.45,001/– முதல் ரூ.60,000/– வரை | ரூ. 588/– |
| 5 | ரூ.60,001/– முதல் ரூ.75,000/– வரை | ரூ.888/– |
| 6 | ரூ.75,001/– அதற்கு மேல் | ரூ.1175/– |

இவ்வாறு நிர்ணயம் 2013–2014 இரண்டாம் அரையாண்டு முதல் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.651 நாள்.26.09.2013–ன் படி அங்கீகரிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேலே தெரிவிக்கப்பட்ட கால அளவின்படி வரும் 01.10.2018 முதல் தொழில்வரி திருத்தியமைக்கப்பட வேண்டி உள்ளது. இவ்வரி உயர்வு 25 சதவீதம் குறையாமலும் 35 சதவீதம் மிகாமலும் நிர்ணயம் செய்ய தெரிவித்து வரப்பெற்றுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1 நாள். 21.05.2018 மன்றத்தின் பார்வைக்கும், தொழில்வரி உயர்வு சதவீதம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

நகராட்சிகளில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி திருத்தி நிர்ணயம் செய்யப்பட வேண்டியது கூட்ட ரீதியான நடவடிக்கையாதலால், அதனை ஏற்று 01.10.2018 முதல் **25 %** தொழில்வரி கீழ்க்கண்டவாறு உயர்வு செய்ய மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

| வ.எண் | அரையாண்டு சராசரி வருமானம் | 01.10.2018 முதல் 25 % உயர்வு செய்து திருத்தியமைக்கப்பட்ட தொழில் வரி |
|---|---|---|
| 1 | ரூ.21,000/– | இல்லை |
| 2 | ரூ.21,000/– முதல் ரூ.30,000/– வரை | ரூ.156/– |
| 3 | ரூ.30,001/– முதல் ரூ.45,000/– வரை | ரூ.375/– |
| 4 | ரூ.45,001/– முதல் ரூ.60,000/– வரை | ரூ. 735/– |
| 5 | ரூ.60,001/– முதல் ரூ.75,000/– வரை | ரூ.1110/– |
| 6 | ரூ.75,001/– அதற்கு மேல் | ரூ.1469/– |

**நகர்மன்ற தீர்மான எண். 894 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>**மன்றப்பொருள்:10**</u>

**கோப்பு எண் : 781/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் கீழ்க்காணும் சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையிலும் காலமுறை பராமரிப்பு செய்ய வேண்டிய நிலையிலும் உள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது . எனவே, கீழ்க்காணும் விபரப்படி சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.3 பழைகோட்டை ரோடு முதல் தொட்டியபட்டி, வார்டு எண்.10 குதிரைப்பள்ளம் ரோடு முதல் செம்மாண்டாம்பாளையம், பங்களாப்புதூர் ரோடு வார்டு எண்.13 திருப்பூர் ரோடு முதல் வெள்ளியங்காடு வரை தார்சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 5.57 | 4.50 | 200.00 |

மேற்படி பணிகள் அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், இப்பணிகளை நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2018–19 (TURIP 2018-19) –ன் கீழ் மேற்கொள்ள கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலககுறிப்பு:**</u>
மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 895 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:11</u>**

**கோப்பு எண் : 2254/2017 /இ1**

**காங்கயம்** நகராட்சி பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டம் ஆகிய குடிநீர் திட்டங்களின் மூலமாக நான்கு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர் அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி தினசரி குடிநீர் விநியோகம் செய்ய தடையாக உள்ள காரணிகளை கண்டறிந்து நிவர்த்தி செய்யவும் இதற்கான அபிவிருத்தி மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்வது சம்பந்தமாக ஆய்வு செய்து சர்வே பணிகள் செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து கொடுக்கும் பணிக்கு தகுதி வாய்ந்த தொழில்நுட்ப ஆலோசகர்கள் நியமனம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் SPT கன்சல்டிங் நிறுவனத்துக்கு ஒரு மாத காலத்தில் பணியினை முடித்துக் கொடுக்க கால அளவு நிர்ணயம் செய்து **06.02.2018** அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. ரூ.**10.00** இலட்சம் மதிப்பீட்டில் இப்பணியை மேற்கொள்ள வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற மூன்று தினங்களுக்குள் ஒப்பந்தப்பத்திரம் அலுவலகத்தில் ஒப்படைத்து பணி ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்ததாரரால் எவ்வித நடவடிக்கையும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் பொதுமக்கள் தினசரி 24 மணி நேரமும் குடிநீர் பெறும் வகையில் DMA 24 X7 எனும் திட்டத்தின் கீழ் நவீன தொழில் நுட்பத்தின் கீழ் தேவையான அபிவிருத்தி மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொண்டு **"தினசரி 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம்"** எனும் இலக்கை அடைய நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இதற்கான தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

தினசரி குடிநீர் விநியோகம் என்ற நிலையிலிருந்து தினசரி 24 மணி நேர குடிநீர் விநியோகம் என்ற நோக்கில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியுள்ளதால், தினசரி குடிநீர் விநியோகத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை கைவிடவும் மேலும் இந்தப் பணிக்காக வழங்கிய வேலை உத்திரவை இரத்து செய்யலாம்

**<u>அலுவலககுறிப்பு</u>**

மேற்படி பணியை இரத்து செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 896 . நாள்.23.05.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:12</u>**

**கோப்பு எண் : 2242/2017/எச்1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2017–2018–இன் கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி மூலம் செயல்படும் அம்மா உணவகததில் உணவு தயார் செய்யப்படும் எரிவாயு குழாயில் எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளதால் மேற்படி கசிவினை சரி செய்ய 15.02.2018–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ மகாலட்சுமி கிச்சன் எக்யூமென்ட்ஸ் | மதிப்பீட்டை விட – 40.42% குறைவு |
| 2 | பெரியநாயகி இன்டஸ்டீரிஸ் | மதிப்பீட்டை விட – 39.50% குறைவு |

**அலுவலக குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட குறைவு இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ளவரிசை எண்.1 திருவாளர் ஸ்ரீ மகாலட்சுமி கிச்சன் எக்யூமென்ட்ஸ், காங்கயம் எனும் நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்த புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.897 . நாள்.23.05.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:13**

**கோப்பு எண் :727/2018/எப்1**

தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920—ன்படி காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டிடம் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம், தொழிற்சாலை கட்டிடங்கள் ஆகியவற்றிக்கு உரிய கட்டணங்கள் காங்கயம் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நாள் முதல் நாளது தேதிவரை உயர்த்தப்படவில்லை.

நகராட்சியின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் மேற்கண்ட கட்டணங்கள் உயர்த்த வேண்டி உள்ளது. மேலும் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் சம்பள செலவினம் மற்றும் இதர பாரமரிப்பு செலவினங்கள் உயர்ந்து கொண்டே போகிறது எனவே, நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு கீழ்கண்டவாறு கட்டணங்களை சேர்க்கவும் மற்றும் உயர்வு செய்யவும் மேலும் அதற்கான செலவினத் தொகையை பொது நிதியில் ஈடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | 1920ஆம் வருடத்திய த.மா.ந. சட்டம் பிரிவின் கீழ் | கட்டண விபரம் | அளவு | காலம் | தற்போது உள்ள கட்டணம் ரூ. | திருத்திய கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 175,176 மற்றும் 177 | அ) காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற கட்டணம் | 1 ஏக்கருக்கு | ஒரு தடவை மட்டும் | — | 10000.00 |
| | | ஆ) மனை உட்பிரிவு கட்டணம் | 1 சதுர மீட்டருக்கு | ஒரு தடவை மட்டும் | — | 5.00 |
| 2 | 187 மற்றும் 188 | தெரு ஓரங்களில் கட்டிட சாமான்கள் சேகரித்து வைத்தல் | கட்டிட உரிமக் கட்டணத்தில் 50 சதவீதம் செலுத்த வேண்டும் | ஒரு தடவை மட்டும் | — | கட்டிட உரிமக் கட்ணத்தில் 50 சதவீதம் செலுத்த வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **மனை அங்கீகரிக்க கட்டணம்** | | | | | |
| 3 | 197 | அ) குடியிருப்பு வீடுகட்ட மனை அங்கீகரிக்க | 100 சதுர மீட்டர் வரை | 1 தடவை | – | 200 |
| | | | 500 ச.மீ மீட்டர் வரை | 1 தடவை | – | 500 |
| | | | 500 சதுர மீட்டருக்கு மேல் | 1 தடவை | – | 1000 |
| | | ஆ) குடியிருப்பில்லாத கட்டிடங்கள் கட்ட மனை அங்கீகரிக்க | 100 சதுர மீட்டர் வரை | 1 தடவை | | 500 |
| | | | 500 ச.மீ மீட்டர் வரை | 1 தடவை | | 1000 |
| | | | 500 சதுர மீட்டருக்கு மேல் | 1 தடவை | | 2000 |

**குறிப்பு :** அனுமதி புதுப்பிக்க (அ) மற்றும் (ஆ) ல் கண்டுள்ள கட்டணம் ஏதுமில்லை.

| வ. எண் | 1920ஆம் வருடத்திய த.மா.ந. சட்டம் பிரிவின் கீழ் | கட்டண விபரம் | அளவு | காலம் | தற்போது உள்ள கட்டணம் ரூ. | திருத்திய கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 4 | 197 மற்றும் 215 | புதிய கட்டிட விண்ணப்பங்களை கூராய்வு செய்ய கட்டணம் கட்டிடம் கட்டுதல் / திரும்பக் கட்டுத்தல் / கூடுதல் செய்தல் அனுமதிக்கு | ஒரு விண்ணப் பத்திற்கு | ஒரு தடவை | – | 500 |
| | | **கட்டிடம் அங்கீகரிக்க அனுமதி கட்டணம்** | | | | |
| | | அ)குடியிருப்பு உபயோகத்திற்காக ஆர்.சி.சி கட்டிடம் கட்டுவதற்காக | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 3 வருடம் | 45 | 200 |
| | | ஆ)குடியிருப்பில்லாத உபயோகத்திற்காக ஆர்.சி.சி கட்டிடம் கட்டுவதற்காக | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 3 வருடம் | 75 | 400 |
| | | இ)குடியிருப்பு உபயோகத்திற்காக ஓடு, சிமெண்ட் ஓடு, தகரகூரை கட்டிடம் கட்டுவதற்காக | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 3 வருடம் | 45 | 150 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஈ) குடியிருப்பில்லாத உபயோகத்திற்காக ஓடு, சிமெண்ட் ஓடு, தகரகூரை கட்டிடம் கட்டுவதற்காக | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 3 வருடம் | 75 | 300 |
| | | உ)பிரதானகட்டிடத்தில் அமைந்துள்ள குளியல் அறை லெட்ரின் மற்றும் டாய்லெட் நீங்கலாக மனையில் கட்டப்படும் | | | | |
| | | 1.கூடுதல் கழிவறை | ஒன்றுக்கு | 3 வருடம் | – | 200 |
| | | 2. குளியல் அறை | ஒன்றுக்கு | 3 வருடம் | – | 200 |
| | | 3.கழிவறையுடன் கூடிய குளியல் அறை மற்றும் டாய்லெட் | ஒன்றுக்கு | 3 வருடம் | – | 300 |
| | | 4.செப்டிக்டேங்க் | ஒன்றுக்கு | 3 வருடம் | 60 | 250 |
| | | 5.சுற்றுச்சுவர் 1.50 மீட்டர் உயரத்திற்கு மேற்படாத சுற்றுசுவர் | 10 மீட்டர் நீளத்திற்கு | 3 வருடம் | – | 100 |
| | | ஊ)அனுமதியற்ற கட்டுமானத்திற்கு | கட்டிட உரிம கட்டணத்தில் 50 % கூடுதல் கட்டணம் செய்யப்பட வேண்டும். | | | |

**குறிப்பு :** கட்டிட அனுமதி காலம் மூன்று ஆண்டுகள் முடிந்த பின்னர் புதிதாக கட்டிட அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

| வ. எண் | 1920ஆம் வருடத்திய த.மா.ந. சட்டம் பிரிவின் கீழ் | கட்டண விபரம் | அளவு | காலம் | தற்போது உள்ள கட்டணம் ரூ. | திருத்திய கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 5 | 217 | தனிப்பட்டோர் நிலங்களில் கண்காட்சி, சர்க்கஸ் இதுபோன்ற காரியங்களுக்கு தற்காலிக கீற்றுக் கொட்டகை போட | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 1 நாள் | – | 100 |
| | | 1. நகரமைப்பு திட்ட வரைபடம் வழங்க (வரைபடம் முழுவதும்) | ஒன்றுக்கு | | – | 500 |
| | | 2.அனுமதிக்கப்பட்ட வரைபடம் உண்மை நகல் வழங்க | ஒன்றுக்கு | | 20 | 100 |
| | | 3. இடிக்கப்பட்ட கட்டிடங்களில் கட்டுமான கழிவு பொருட்களை அகற்ற | லாரி லோடு ஒன்றுக்கு | | | 1000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 4.உரிமம் பெற்ற வரைவாளராக பதிவு செய்ய (முதல் தடவை) | உரிமக் கட்டணம் ஒரு நபருக்கு | ஒரு தடவை மட்டும் | 500 | 1000 |
| | | 5.வரைபட வரைவாளரின் முன்வைப்புத் தொகை | ஒரு நபருக்கு | ஒரு தடவை மட்டும் | 1000 | 2000 |
| | | 6.உரிமம் பெற்ற வரைவாளர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் | ஒரு நபருக்கு | வருடம் 1 க்கு | 1000 | 1500 |
| 6 | நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 60–இன்படி | அரசு வழிகாட்டுதல்படி நிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கட்டணம் | 1 சதுர மீட்டர் | ஒரு தடவை மட்டும் | 1 | 6 |
| 7 | | அரசு வழிகாட்டுதல்படி கட்டிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கட்டணம் | 1 சதுர மீட்டர் | ஒரு தடவை மட்டும் | 5 | 30 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 898 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:14</u>**

**ந.க.எண். 698/2018/எச்1**

காங்கயம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டிரேக்டர் வண்டி எண். TN 33 AZ 0014–க்கு வருடாந்திர புதுப்பித்தல் (FC) செய்ய வேண்டியுள்ளதால் மேற்கண்ட வண்டியிலுள்ள பழுதுகளை சரி செய்திடவும், பெயிண்டிங் செய்து புதுப்பித்தல் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு ஆய்விற்கு காண்பிக்க வேண்டியுள்ளதால், மேற்கண்ட வண்டியில் உள்ள பழுதுகளை சரி செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 70000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்).

**அலுவலுக குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண். 899 . நாள்.23.05.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(ஒ.ம்) சு.சு. சுரேஷ்குமார்**
**ஆணையாளர்**
**மற்றும் தனிஅலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**மேலாளர்**
**காங்கயம் நகராட்சி**